MAY 2022

U/ID 33207/UCT2B/ UCL2A

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும்
30 சொற்களில் விடை எழுதுக.

1. தேவாரம் என்றால் என்ன?
2. திருஞானசம்பந்தர் வாழ்வியலை எழுதுக.
3. ஏழாந்திருமுறையின் சிறப்பினை விளக்குக.
4. திருவண்ணாமலையின் தலவரலாற்றை எழுதுக.
5. மாணிக்கவாசகரின் வாழ்வியலை எழுதுக.
6. நாலாயிரத் திவ்யப்பிரபந்தம் குறித்தெழுதுக.
7. குலசேகராழ்வார் குறித்தெழுதுக.
8. சிறியதிருமடல் நூல் சிறப்பை எழுதுக.
9. குணங்குடிமஸ்தான் குறிப்பு வரைக.
10. திருஅருட்பாவின் சிறப்பினை எழுதுக.
11. இராமலிங்க அடிகளாரின் வாழ்வியல் சிறப்பை எழுதுக.
12. திருநாவுக்கரசரின் அற்புதங்கள் குறித்தெழுதுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும்
200 சொற்களில் விடை எழுதுக.

13. தோடுடைய செவியன் பதிகப்பாடல் உணர்த்தும் இறையுணர்வை எழுதுக.

14. தொல்வினைகள் எவற்றால் நீங்கும் என்று திருஞானசம்பந்தர் கூறுகின்றார் விளக்குக.

15. சிவபெருமானின் அற்புதச் செயல்களாகப் பித்தாபிறை சூடி பதிகம் உரைப்பன யாவை?

16. ஊழி முதல்வனாய் நின்ற இறைவனை மாணிக்கவாசகர் எங்ஙனம் பாடியுள்ளார்? விளக்குக.

17. 'மன்னு புகழ் பாசுரம்' உணர்த்தும் செய்திகள் யாவை?

18. சிறிய திருமடலில் தலைவியின் உடல்நோய் குறித்தெழுதுக.

19. பராபரக்கண்ணி உரைக்கும் இறைவேண்டுதல் தன்மையை விவரிக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும்
500 சொற்களில் விடை எழுதுக.

20. நாவரசரின் நாமார்க்கும் குடியல்லோம் பதிகம் புலப்படுத்தும் வாழ்வியல் தத்துவங்கள் யாவை?

21. திருச்சதகம் உரைக்கும் செய்திகள் யாவை?

22. ஆலைநீள் கரும்பாகப் பெருமாள் திருமொழி பகர்வன யாவை?

23. சிறிய திருமடலின் திருமாலின் அற்புதச் செய்திகளை விவரிக்க.

24. கந்தக்கோட்டத்தின் சிறப்பினைக் கட்டுரைக்க.

———————